<u>தொழிலாளர் நீதிமன்றம். காஞ்சிபுரம்</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **CP.No.** | : | 158/2024 | சாட்சியம் | : | **PW1** |
| **Name** | : | திரு.தனபாலன் | | | |
| **Date** | : | **01.09.2026** | | | |
| **Time** | : | **10.41 a.m to 10.55 a.m** | | | |

<u>ம.த.சா.**1.**திரு. தனபாலன் என்பவர் இன்று ஆஜர் செய்யப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார். குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

ID ல் உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பின்னர் மீண்டும் வேலை கேட்டு வழக்கறிஞர் மூலம் எதிர்மனுதாரர் நிறுவனத்திற்கு கடிதம் அனுப்பினேனா என்றால் என் வழக்கறிஞர் நேரடியாக சென்று கேட்டார் நானும் அப்போது உடன் இருந்தேன். 31.08.2021 அன்று மேல்முறையீடு முடிவடைந்தது. மேல்முறையீடு முடிவடைந்து 3 ஆண்டுகள் கழித்து இந்த மனு தாக்கல் செய்ய என்ன காரணம் என்றால் உத்தரவு நகல் கிடைக்க தாமதம் ஆனது. எதிர்மனுதாரர் நிறுவனத்திடம் இருந்து நன்னடத்தை சான்றிதழ் எதற்காக வாங்கினேன் என்றால் எதிர்மனுதாரர் குறைந்த சம்பளம் கொடுத்ததால் வேறு நிறுவனத்தில் வேறு வேலைக்கு செல்லலாம் என்ற எண்ணத்தில் வாங்கினேன். 1997 லிருந்து மனு தாக்கல் செய்யப்பட்ட வரை வேறு எங்கும் வேலை செய்யவில்லை என சொல்லியுள்ளேன் என்றால் கூலி வேலை செய்ததாக சொல்லியுள்ளேன். நான் தாக்கல் செய்திருக்கும் கணக்கீட்டு

விவரங்கள் யார் அறிவுறுத்தலின் பேரில் தயார் செய்யப்பட்டது என்றால் நான் சொன்ன தகவல் அடிப்படையில் என்னுடைய Auditor தயார் செய்தார். தொழிலாளியின் அடிப்படை ஊதியம் எவ்வளவு என்பது எனக்கு தெரியும் அதன் அடிப்படையில் தயார் செய்யப்பட்டது. தீர்வத்தில் வட்டியுடன் வழங்க வேண்டும் என உத்தரவு கண்டுள்ளதா என்றால் ஆமாம். நிர்வாகத்துடன் பேச்சு வார்த்தை நடத்தியதற்கு ஆதாரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நான் சமரசமாக முடித்துக்கொள்வதை தாமதபடுத்த வேண்டி வேண்டுமென்றே மிகவும் காலம் தாழ்த்தி மனுவை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் இல்லை.

மறு விசாரணை: இல்லை

Typed to my dictation, read over to, interpreted to the witness and acknowledged by her/him to be correct.

Sd/-S.Sujatha,
Presiding Officer,
Labour Court, Kancheepuram.
Dated:01.09.2026.